இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை காட்டும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கூட்டுத்தாபனத்தை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் சபையை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கூட்டுத்தாபனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது ˙ கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

	உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நாலந்தா மற்றும் விலச்சிய தோட்டங்களை பதிவழித்தலின் கீழ் ரூபா 32,908 குறைத்தும் புதிய பயிர் நடுகை முதலீடு ரூபா 56,611 அதிகரித்தும் ஏனைய சிறு செயற்திட்ட முதலீடுகள் ரூபா 145,740 அதிகரித்தும் ஒட்டுமொத்தமாக ரூபா 235,259 வித்தியாசம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	இணங்கிக் கொள்கிறேன். இதன் கீழ் குறிப்பிடப்பட்ட நாலந்தா மற்றும் விலச்சிய தோட்டங்களை பதிவழித்தல், புதிய பயிர் நடுகைக்கான முதலீடு மற்றும் ஏனைய சிறு செயற்திட்டங்களுக்கான முதலீடு ஆகிய செம்மையாக்கல்கள் சம்பந்தமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் உரிய சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது சரியான பெறுமதியை பயன்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 36 ஆம் பந்தியின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மோட்டார் வாகனங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பின் போது ஒரே தொகுதியைச் சார்ந்த அனைத்து சொத்துக்களும் ஒரே தடவையில் மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் 28 மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்புச் செய்யப்படவில்லை.	நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு வழங்கியதன் பின்னர் மீள்மதிப்புச் செய்யப்பட்ட 06 மோட்டார் வாகனங்களின் மீள்மதிப்பு பெறுபேறு கணக்கீடு செய்யப்பட வேண்டி இருந்தது. இன்னும் மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டிய மோட்டார் வாகனங்களின் எண்ணிகை 22 ஆகும். அவற்றில் மிகவும் பழைய 08 வாகனங்களின் செஸி இலகத்கதின் தெளிவற்ற நிலைமையின் காரணமாக அந்த வாகனங்களின் மீள்மதிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. இது சம்பந்தமாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு 2025-04-22 ஆந் திகதி எழுத்துமூலம் தெரியப்படுத்தி தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுதல்	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஒரே தொகுதியைச் சேர்ந்த அனைத்து சொத்துக்களும் மீள்மதிப்பு செய்யப்படுதல் வேண்டும்.

		விடுக்கப்பட்டுள்ளது. மீள்மதிப்பு நடவடிக்கைகளுக்காக உரிய பிரதேசத்திலுள்ள மோட்டார் வாகன தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு நடைமுறையில் குறிப்பிடத்தக்க அளவு காலம் எடுப்பதனால் மிகுதியான மோட்டார் வாகனங்களின் மீள்மதிப்பு நடவடிக்கைகளை பூரணப்படுத்துவதற்கு முடியாதுள்ளதுடன் அந்த நடவடிக்கைகளையும் முடியுமான அளவுக்கு விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(இ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 77 ஆம் பந்திக்கு இணங்க ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 159,475,000 தொகையான சொத்துக்களின் மீள்மதிப்பு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு குறிப்புக்களில் வெளிப்படுத்துதல் எதுவும் இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.	முகாமைத்துவத்தின் கருத்துரை தரப்படவில்லை.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் மீள்மதிப்பு தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்படுதல் வேண்டும்.
(ஈ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான எச்சப் பெறுமதி மற்றும் பயன்படுத்தக்கூடிய ஆயுள் காலம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 44,648,405 தொகை முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் இன்னும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு காணப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவத்தின் கருத்துரை தரப்படவில்லை.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் இயலளவு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.
(உ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் பிரகாரம் ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் முறையான முதலீட்டுத் திட்டத்திற்கு இணங்க முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கின் ரூபா 51,175,852 மீதிக்கு தொடர்புபட்டதாக ஒரு முதலீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மிளாய்வாண்டில் ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கீட்டிற்கான ஒரு முதலீடாக மாதாந்தம் ரூபா 100,000	இதில் குறிப்பிட்டவாறு தற்பொழுது கூட்டுத்தாபனத்திடம் காணப்படுகின்ற நிதி ஏற்பாடுகளுக்கு இணங்க ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கீட்டிற்காக ரூபா 100,000 தொகை மாதாந்தம் இலங்கை வங்கியின் சேமிப்பு கணக்கில் வைப்புச் செய்யப்படும். எவ்வாறாயினும் எதிர்காலத்தில் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையை கவனித்து பார்த்து பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு ஓய்வூதிய பணிக்கொடை	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பணிக்கொடை பொறுப்பினை தீர்த்துவைப்பதற்காக போதியளவான முதலீட்டினை உருவாக்குதல் வேண்டும்.

	தொகை இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 502,223 ஆகும்.	ஒதுக்கீட்டிற்காக மாதாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற முதலீடு ரூபா 200,000 வரை அதிகரிக்கச் செய்வதற்கும் அத்தொகையை இன்னும் படிப்படியாக அதிகரிப்பதற்கும் தேவையான தீர்மானத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஊ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் பிரகாரம் இருப்புக் கிரயத்தினை கணிப்பீடு செய்வதற்காக நிறையூட்டிய சராசரி கிரய முறை பயன்படுத்தப்பட்டிருந்தும் நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கையாக முதலாவது பெறுவதனை முதலாவது வழங்குதல் (FIFO) முறைமை பயன்படுத்தப்படுகின்றது என நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் இருப்புக் கிரயத்தினை அடையாளங்காண்பதற்காக முதலாவது பெறுவதனை முதலாவது வழங்குதல் (FIFO) முறைமைக்கு நேரொத்ததாக நிறையூட்டிய சராசரி கிரய முறைமை (WAC) மிகவும் நடைமுறைசாத்தியமானது என தீர்மானிக்கப்பட்டதனால் அதற்கிணங்க அந்த முறைமையின் கீழ் இருப்புக் கிரயம் கணிப்பீடு செய்யப்பட்டதுடன் அதற்கிணங்க அதற்கு நேரோத்ததாக நிதிக்கூற்றுக்களில் இருப்பினை மதிப்பீடு செய்வது சம்பந்தமான கணக்கீட்டு கொள்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீட்டு கொள்கைக்கு இணங்க இருப்புக் கிரயத்தினை கணிப்பீடு செய்வதற்காக கிரய முறைமையை பயன்படுத்துதல் வேண்டும்.
(எ)	இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் இலக்கம் 09 இன் பிரகாரம் வணிக கடன்பட்டோருக்காக நட்டத்தை ஒதுக்கீடு செய்வதற்கு ஆயுள் காலத்திற்குள் எதிர்பார்த்த கடன் நட்டத்தினை (Lifetime expected Credit Loss - ECL) அடிப்படையாகக் கொண்டு இலகுபடுத்தப்பட்ட மாதிரி (Simplified Approach) ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் நிதிக் கூற்றுத் திகதியில் உள்ள முழு வணிக கடன்பட்டோர் மீதியின் அடிப்படையில் 5 சதவீதமாக பொது ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்படவில்லை.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஆயுள் காலத்திற்குள் எதிர்பார்த்த கடன் நட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு வணிகக் கடன்பட்டோருகான நட்டத்திற்கு ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2024 ஆம் ஆண்டின் போது நாலந்தா தோட்டம் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டிருந்தும் நடைபெற்றுக்	இணங்கிக் கொள்கிறேன். இதில் குறிப்பிட்டவாறு முடிவுறாத வேலையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 793,092	நிறுவனத்திற்குச் சொந்தமில்லாத சொத்துக்களை நீக்கி

	கொண்டிருக்கும் வேலையின் கீழ் உள்ள ரூபா 793,092 பெறுமதியான நாலந்தா அலுவலக உத்தியோகபூர்வ இல்லத்தின் பெறுமதி கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.	தொகையான நாலந்தா அலுவலக உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாண கிரயத்தினை அதிலிருந்து நீக்கி நிதிக்கூற்றுக்களைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 1,586 ஏக்கர் 02 ரூட் 24 பேச்சஸ் பரப்பளவுள்ள 07 தோட்டங்கள் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படுகின்றமைக்காக 1999 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக அந்த ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,357,791 தொகை மற்றும் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை அந்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 1874 ஏக்கர்கள் பரப்பளவுள்ள ஒரு காணியை பயன்படுத்தியமையின் காரணமாக குத்தகையாக அந்த ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய பணம் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிக்காக செலுத்த வேண்டிய பணத்திற்கான ஒதுக்கீடு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையானது உரிய காணிகளின் நில அளவை நடவடிக்கைகளுக்காக கட்டளைகளை வழங்கும் போது உருவாகியுள்ள பிரச்சினைகள் அந்த ஆணைக்குழுவின் மூலம் இன்றுவரை தீர்த்துவைக்கப்படாததினாலாகும். உரிய பிரச்சினையைத் தீர்த்துவைத்து அதற்கிணங்க காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுடன் எதிர்காலத்தில் நடாத்துவதற்கு நிர்ணயிகபட்டுள்ள கலந்துரையாடலின் பின்னர் உரிய பிரச்சினையை தீர்த்துவைத்துக் கொண்டதன் பின்னர் திருத்திய செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிறுவனம் பயன்படுத்துகின்ற காணிகளுக்குரிய குத்தகையை கணித்து சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(இ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணமான ரூபா 1,331,040 தொகை ரூபா 531,298 ஆக அதாவது ரூபா 799,742 குறைத்து காட்டப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.	செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணத்தை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஈ)	2011 ஆம் ஆண்டிலிருந்து வருமான வரியினைக் கணித்து ஒதுக்கீடு செய்வதற்கு, செலுத்துவதற்கு மற்றும் வருமான வரி அறிக்கையினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அறவீடு செய்ய முடியாத பிடித்து வைத்தல் வரி (WHT) ரூபா 779,483 தொகை நிதிக்கூற்றுக்களில் ஒரு கிடைக்க வேண்டிய மீதியாக காட்டப்பட்டிருந்தது.	2023/2024 ஆண்டு தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் வருமான வரி கூற்று இணையவழி முறைமைகளின் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டு அடுத்துவரும் குறுகிய காலத்திற்குள் உரிய வரிக் கூற்றினை அனுப்பும் நடவடிக்கையை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய ஆண்டுகளுக்காகவும் உரிய எதிர்கால தீர்மானங்களுக்கு இணங்க வருமானவரிக் கூற்றினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமானவரியை கணித்து ஒதுக்கீடுகள் செய்வதற்கு, செலுத்துவதற்கு மற்றும் வருமானவரி அறிக்கையினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	கூட்டுத்தாபனத்தினால் அப்போது காணப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு 11 ஆண்டுகளுக்கு முன்னர் ரூபா 9,466,200 தொகையான மரமுந்திரிகை நாற்றுக்கள் வழங்கப்பட்டிருந்தன. உரிய அமைச்சு தற்பொழுது இரத்துச் செய்யப்பட்டுள்ளதனால் ஏனைய கடன்பட்டோர் மீதியில் உள்ள அக்கடனை அறவீடு செயயும் இயலுமை இல்லாமை அவதானிக்கப்பட்டது.	இப்பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக நிதி அமைச்சின் அரசாங்க தொழில் முயற்சிகள் தீணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள எழுத்துமூல ஆலோசனைகளுக்கு இணங்க உரிய கடனை அறவீடு செய்வதற்கு காணப்பட்ட அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்பட்ட திவினெகும தீணைக்களதம்தின் விடயம் தற்பொழுது கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளதனால் குறித்த விடயம் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்காக அந்த அமைச்சிற்கு ஒரு கடிதத்தினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை அதற்காக பதில் கிடைத்திருக்கவில்லை. அதற்கிணங்க அது தொடர்பாக 2025-06-27 ஆந் திகதி ஞாபகப்படுத்தல் கடிதத்தினை உரிய அமைச்சிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக கிடைக்கின்ற அறிவுறுத்தல்களுக்கு இணங்க மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	கிடைக்க வேண்டிய கணக்கு மீதியை தாமதமின்றி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கூட்டுத்தாபனத்தின் வணிக கடன்பட்டோர் மீதியில் 01 ஆண்டிற்கும் 02 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 1,670,356 தொகையும் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 2,676,845 டிதாகையும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கடனை செலுத்தாத நிறுவனத்திற்கு கடனை தீர்த்துவைப்பதற்கு முன்னர் மீண்டும் கடனுக்கு மரமுந்திரிகை வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கடன் அடிப்படையில் விற்பனை செய்தல் மற்றும் கடனை அறவீடு செய்தல் தொடர்பாக கூட:டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமானது என அவதானிக்கப்பட்டது.	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிமைப் பத்திரம் பெற்ற மற்றும் உரிமைப் பத்திரம் பெறாத கடன்பட்டோர் மீதிகளின் ஒட்டுமொத்த தொகையான ரூபா 9,401,878 பெறுமதியில 2025-06-30 ஆந் திகதி வரை ரூபா 4,432,047 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட திகதியில் இன்னும் அறவீடு செய்வதற்கு காணப்படுகின்ற ரூபா 4,969,831 பெறுமதியில் உயர்வான கடன்பட்டோர மீதியான ரூபா 1,454,410 தொகை லிசல	கடன் மீதியை அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		என்டபிறைஸ் நிறுவனத்திடமிருந்து அறவீடு செய்ய வேண்டியிருந்ததுடன் இது சம்பந்தமாக அவ்வப்போது அந்த நிறுவனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட தெரியப்படுத்தல்களுக்கு பதில் இல்லாததனால் இக்கடனை அறவீடு செய்வதற்காக தற்பொழுது சட்ட நடவடிக்கைகளுக்கு ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே ஏனைய கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க அக்கடன் மீதிகளையும் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

1.6.2 செலுத்தவேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
அப்போது காணப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் தலையீட்டில் முந்திரிகைகளை கொள்வனவு செய்வதற்காக 2005 ஆம் ஆண்டின் போது மீளச் செலுத்தும் அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தும் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,500,000 தொகையையும் அதற்குரிய வட்டியான ரூபா 927,500 தொகையையும் மீளாய்வாண்டு வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இணங்கிக் கொள்கிறேன். பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்த கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 9,466,200 தொகை கிடைத்ததன் பின்னர் நெல் சந்தைப்படுத்தும் சபையிடமிருந்து கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ரூபா 3,500,000 கடன் தொகையையும் அதற்குரிய வட்டியையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தாமதமின்றி தீர்த்துவைத்தல் வேண்டும்.

1.6.3 முற்பணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை இலக்கம் 371(2) இன் கீழ் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தரினால் கடமை நடவடிக்கைகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் (குறித்த செயலுக்கான உப கட்டுநிதி) அவை வழங்கப்பட்ட செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்ட உடன் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத பெறுமதி ரூபா 617,000 ஆன 09 சந்தர்ப்பங்கள்	பல்வேறு நடைமுறை சிக்கல்களின் காரணமாக இதில் குறிப்பிட்ட முற்பணங்களை தீர்த்துவைக்கும் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் அடுத்துவரும் குறுகிய காலத்திற்குள் இந்த அனைத்து முற்பணங்களையும் தீர்த்துவைக்கும் நடவடிக்கையை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து அது சம்பந்தமாக தேவையான அறிக்கையிடுதல்	முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்துவைத்தல் தொடர்பான கட்டுபபாட்டினை ஆக்கபூர்வமாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

	இருந்தன. அந்த தீர்த்துவைக்கப்படாத காலம் 01 மாதத்திலிருந்து 04 ஆண்டுகள் 03 மாதங்கள் வரையான கால வீச்சினைக் கொண்டிருந்தது. அதற்கிணங்க முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்துவைத்தல்கள் தொடர்பான கட்டுப்பாடு பலவீனமடைந்திருந்தன.		மேற்கொள்ளப்படும்.	

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	**இணக்கமின்மை**	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	2012 யூலை 24 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான குழுத் தீர்மானம்.	கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரிமை இல்லாத காணிகளின் சட்டரீதியான உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் தெரியப்படுத்தியிருந்தும் பிரதேச செயலகம் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மூலம் 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் 2367 ஏக்கர்கள் மற்றும் 2012 ஆம் ஆண்டின் பின்னர் வழங்கிய 8,959 ஏக்கர்களான மரமுந்திரிகை செய்கை பண்ணுகின்ற ˙11,326 ஏக்கர் காணிகளின் சட்டரீதியான உரிமையை பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.	கூட்டுத்தாபனத்தின் எலுவன்குளம் தோட்டம் அமைந்துள்ள கட்டம் I மற்றும் கட்டம் II காணிகளின் மற்றும் சுதுவதுர- ஆர காணியின் நில அளவை நடவடிக்கைகளைமுடிவு செய்து புத்தளம் ஆச்சிகேவத்த தோட்டம் மற்றும் கமன்தளுவ தோட்டம் அமைந்துள்ள காணிக்காகவும் நில அளவை கட்டளை வழங்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரிமையை பொறுப்பேற்றல் பூரணப்படுத்தப்பட வேண்டிய கூட்டுத்தாபனத்தின் முழுக் காணிகளின் எண்ணிக்கை 08 ஆகும். நில அளவை திணைக்களத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட முழு கிரயம் ரூபா 20.218 மில்லியனாகும். காணப்படுகின்ற நிதி நிலைமையை கவனித்துப் பார்த்து கூட்டுத்தாபனத்தின் 2025 ஆம்	பொது முயற்சிகள் குழுவின் தீர்மானத்திற்கு இணங்க சட்டரீதியாக உரிமை இல்லாத காணிகளின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

					ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டின் மூலம் ரூபா 2.00 மில்லியனை செலவு செய்யும் இயலுமை காணப்படுகின்றது. இன்னும் தேவைப்படுகின்ற ரூபா 18.218 மில்லியன் நிதி ஏற்பாட்டிற்காக ஒரு கடிதம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே காணி ஆணையாளரின் நாயகத்தின் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற காணிகள் தொடர்பான ஒரு அறிக்கையினை காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் வெள்ளாங்குளம் மற்றும் பூநகரி தோட்டங்களின் நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நில அளவை கட்டளைகளை சமர்ப்பிக்குமாறு மாந்தை (மேற்கு) மற்றும் பூநகரி பிரதேச செயலகங்களுக்கு தெரியப்படுத்துமாறு எழுத்துமூல வேண்டுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க நடைமுறை ஆண்டின் போது உரிய நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
(ஆ)	2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 30	கணக்காய்வு அதிகாரச் இன்வொயிஸ் திகதியிலிருந்து	கட்டண பத்திரத்தின்	கூட்டுத்தாபனத்தினால் தற்பொழுது காணப்படுகின்ற	நிலுவையான கணக்காய்வு நிதி	கட்டணத்தை

	சட்டத்தின் 18 ஆம் பிரிவு	நாட்களுக்குள் செலுத்தி தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2024 மார்ச் 26 மற்றும் 2024 நவம்பர் 27 ஆந் திகதிகளில் வழங்கப்பட்ட கணக்காய்வு கட்டண இன்வொயிஸ்களுக்காக இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தனால் கணக்காய்வு கட்டணம் ரூபா 1,331,040 தொகையினை செலுத்தி தீர்த்துவைத்திருக்கவில்லை.	நிலைமையின் அடிப்படையில் கணக்காய்வு கட்டணத்தை செலுத்துதல் தாமதமடைந்துள்ளதுட ன் இந்த ஆண்டின் போது 2023 ஆம் ஆண்டு வரையான நிலுவை கணக்காய்வு கட்டணம் ரூபா 1,331,040 தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தாமதமின்றி தீர்த்துவைத்தல் வேண்டும்.
(இ)	திறைசேரி செயலாளரின் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய PED/01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் அரசாங்க தொழில் முயற்சிகளின் நல்லாட்சிகாக வழங்கப்பட்ட கையேட்டின் 66 ஆம் பந்தி	நிதி அண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைபு ஆண்டறிக்கையையும் கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் வரிசை அமைச்சிற்கும் திறைசேரியின் தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் 2025 ஏப்ரல் 11 அந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.	இணங்கிக் கொள்கிறேன். தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்கு முன்னராக நடைபெற்ற மீளாய்வின் போது நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட தொழில் நுட்ப குறைபாடுகளை சரிசெய்வதற்கு குறிப்படத்தக்க அளவு காலம் எடுப்பதனால் இதில் குறிப்பிட்டவாறு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமைஅதிபதிக்கு சமர்ப்பிக்கும் போது தாமதம் ஏற்பட்டுள்ளது. எவ்வறாயினும் அடுத்துவரும் ஆண்டுகளிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியின் போது கணக்கறிக்கைக ளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிததல் வேண்டும்.
(ஈ)	நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 2017 யூன் 28 ஆந் திகதிய MF/CG/02(Cir) ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ	சொத்துக்களை அடையாளங்காணல் மற்றும் முகாமைத்துவம் செய்யும் நடவடிக்கைகளின் பொது அச்சொத்துக்களுக்காக வகைப்படுத்தல் குறியீடு அறிமுகப்படுத்தியிருக்க வேண்டிய	2024 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு நடவடிக்கைகளின் போது ஹெதகமுவ மற்றும் புத்தளம் செயன்முறைப்படுத்தும்	நிறுவனத்தின் சொத்துக்களுக் கு குறியீடு இடுவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல்

சுற்றறிக்கையிகன் 09 ஆம் இலக்க பந்தி	போதிலும் அவ்வாறு குறியீட்டினை அறிமுகப்படுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை.	நிலையங்கள் கூட்டுத்தாபனத்தின் 05 விற்பனை நிலையங்கள் மற்றும் புத்தளம் பிராந்திய அலுவலகததை தவிர்த்து கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தை உள்ளடக்கி ஏனைய அனைத்து தோட்டங்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்காக சொத்துக்களை வகைப்படுத்தும் குறியீட்டினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2025 ஆம் ஆண்டின் போது பொருள் மீளாய்வு நடவடிக்கைகளுக்கு சமாந்தரமாக சொத்துக்களுக்கு குறியீடு செய்தல் அறிமுகப்படுத்தப்படாத கடமை வளவுக்காகவும் குறியீடுகளை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையை பூரணப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,845,266 இலாபமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 5,020,580 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 18,865,846 தொகை இலாபத்தில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு விற்பனை வருமானம், மிண்டுவரும் மானியம் மற்றும் ஏனைய வருமானங்களில் அதிகரிப்பு பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	கூட்டுத்தாபனத்தின் புத்தளம் மாவட்டத்திலுள்ள எலுவன்குளம் தோட்டத்தில் 2000 ஆம் ஆண்டின் போது ரூபா 482,874 செலவு செய்து	வன பாதுகாப்பு திணைகளத்தின் ஆலோசனையைப் பெற்று இதில் குறிப்பிட்ட எலுவன்குளம் தோட்டத்தில் காணப்பட்ட 4,253	எலுவலன்குளம் தோட்டத்தின் சட்டரீதியான உரிமையை

	பயிர்ச்செய்கை செய்யப்பட்ட தேக்கு நாற்றுக்கள் 2024 ஆம் ஆண்டளவில் மரங்களை பெற்றுக்கொள்ளும் நிலைமை வரை வளர்ச்சியடைந்திருந்ததுடன் அதில் உள்ள மரங்களின் எண்ணிக்கை 4253 ஆகும். அவற்றின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 244,000,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் தோட்டத்தின் சட்டரீதியான உரிமையை கூட்டுத்தாபனத்தினால் பொறுப்பேற்கும் நடவடிக்கை இதுவரை முடிவடைந்திருக்காததனால் அந்த மரங்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. மேலும் அந்த மரங்களை பணமாக்குவதன் மூலம் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த நிதிசார் நலன்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.	எண்ணிக்கையான தேக்கு மரங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை முடிவடைந்துள்ளதுடன் அதற்கிணங்க 2023-03-27 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 244.337 மில்லியனாகும். எவ்வாறாயினும் எலுவலன்குளம் தோட்டத்தின் சட்டரீதியான உரிமையை கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கும் நடவடிக்கை இதுவரை முடிவடைந்திருக்காததனால் அந்த தேக்கு மரங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியை கூட்த்தாபனத்தின் கணக்குகளில் உள்ளடக்கும் இயலுமை இல்லை. தற்பொழுது எலுவன்குளம் தோட்டத்தின் நில அளவை நடவடிக்கைகளும் முடிவடைந்துள்ளதுடன் அதற்கிணங்க தோட்டத்தின் சட்டரீதியான உரிமையை பொறுப்பேற்கும் நடவடிக்கை பூரணப்படுத்தப்பட்ட உடன் அது தொடர்பான செம்மையாக்கல்களை கணக்கு ஏடுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பொறுப்பேற்கும் நடவடிக்கையை துரிதமாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	புத்தளம், கமன்தளுவ மற்றும் அம்பாறை ஹாடி தோட்டங்களில் அமைந்துள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை 4,184 ஆனதுடன் அவை முதிர்ச்சியடையாத 1,147 மரங்கள், விளைச்சல் தருகின்ற 2,391 மரங்கள் மற்றும் விளைச்சல் தராத 646 மரங்களையும் உள்ளடக்கியிருந்தன. 2024 ஆம் ஆண்டில் தேங்காய் விளைச்சல் 46,032 தேங்காய்களாக இருந்ததுடன் அந்த விளைச்சலின் விற்பனை பெறுமதி ரூபா 3,210,300 ஆகும். அதற்கிணங்க விளைச்சல் தருகின்ற ஒரு மரத்தின் வருடாந்த தேங்காய் விளைச்சல் 19 தேங்காய்களாக இருந்தன. விளைச்சலினை அதிகரிப்பதற்கு தென்னை மரங்களைப் பராமரித்தல், பசளையிடுதல் பலவீனமடைதல் மற்றும் விளைச்சல் தராத 491 தென்னை மரங்களை அகற்றுதல் முதலிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இணங்கிக்கொள்கிறேன். தேங்காய் விளைச்சல் குறைவடைவதற்கு தென்னை மரங்களுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டிய பசளை முறைப்படியாக ஈடுபடுத்தப்படாதிருந்தமையே காரணமாகும். மேலும் காலநிலை நிலமையும் இந்த விளைச்சல் குறைவடைந்தமைக்கு காரணமாகும். எனினும் தற்பொழுது அந்த பசளைகளை முறைப்படியாக இடுதல் இடம்பெறுவதுடன் அதன் மூலம் எதிர்காலத்தில் தேங்காய் விளைச்சலில் அதிகரிப்பினை எதிர்பார்க்கலாம். விளைச்சல் தராத 491 தென்னை மரங்களை அகற்றுவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து புத்தளம் மாவட்ட செயலாளரினால் உரிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் விவசாய அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக அங்கீகாரம்	தேங்காய் விளைச்சலினை அதிகரிக்கச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		கிடைத்ததன் பின்னர் அந்த மரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(இ)	இலங்கையில் 70,000 ஹெக்டயர் அளவிலான மரமுந்திரிகை பயிர்ச்செய்கை காணப்படுவதுடன் ஒரு ஆண்டிற்கு 100,000 மெட்ரிக் தொன்களுக்கும் 120,000 மெட்ரிக் தொன்களுக்கும் இடையிலான அளவுடைய முந்திரிகை பருப்புக்கள் வீணாகுதல் மற்றும் முந்திரிகை உற்பத்தியின் பின்னர் 75 சதவீதமான முந்திரீகை தோல்கள் கழிவாக அதாவது அண்ணளவாக 59,415 மெட்ரிக் தொன் நீக்கப்படுவதாக கூட்டுத்தாபனத்தின் தரவுகளின் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் இக்கழிவுப் பொருட்களிலிருந்து மேற்கொள்ளக்கூடிய கைத்தொழில்களை ஆராய்ந்து பார்த்து அது தொடர்பாக எடுக்ககூடிய பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	முந்திரிகை விளைச்சல் சேகரிக்கப்படுவதாவது முந்திரிகை பழம் கீழே விழுந்ததன் பின்னராகும். அதற்கான காரணமாவது முந்திரிகை விதையின் முழுமையான முதிர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதாக கருத்தில் கொள்ளப்படுவது முந்திரிகை பழம் கீழே விழுந்ததன் பின்னராகும். முந்திரிகை பழம் கீழே விழுந்ததன் பின்னர் மிகவும் விரைவாக 24 மணித்தியாலங்களுக்குள் பழத்திற்கு உள்ளே உள்ள இரசாயப் பொருள் வளிமண்டலத்தின் வளியுடன் எதிர் விளைவுகள் இடம்பெறறு பினோலிக் கலவை உருவாகுவதன் மூலம் உப உற்பத்திகள் மேற்கொள்வது சிக்கலானதாகும். மேலும் இலங்கையில் முந்திரிகை விளைச்சல் காணப்படுகின்ற காலப்பகுதியின் போது பழுத்த முந்திரிகைப் பழங்கள் காட்டு மிருகங்களின் உணவாக எடுத்துக்கொள்ளப்படுவதனால் அனைத்து முந்திரிகை பழங்களையும் ஆக்கபூர்வமாக ஏதாவது கைத்தொழிலுக்கு ஈடுபடுத்துவதற்கு முடியாதுள்ளதுடன் சிறிய அளவினை மாத்திரம் பாதுகாப்பாக எடுத்து குளிரூட்டப்பட்ட களஞ்சியத்தில் வைப்பதன் மூலம் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திக்காக பயன்படுத்த கூடியதாக இருக்கும் முந்திரிகை தோலின் மூலம் எண்ணை பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டினை நிறுத்த வேண்டியதாக இருந்ததானது அதற்காக வேண்டுதல்கள் இலலை என்பதனாலாகும். அதற்காக பயன்படுத்தப்பட்ட இயந்திரம் நெதகமுவ செயன்முறைப்படுத்தல் நிலையத்தில் காணப்படுகின்றது. முந்திரிகைப் பழங்களிலிருந்து வைன் மற்றும் வினாகிரி தயாரிப்பதற்காக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் கூட்டுத்தாபனத்தின் நான்கு உத்தியோகத்தர்கள்	வைன் மற்றும் எதில் எல்கஹோலினை தயாரிப்பதற்கும் உப உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		பயிற்றுவிக்கப்பட்டதுடன் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டதன் பின்னர் அந்த உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.	
(ஈ)	நெதகமுவ செயன்முறைப்படுத்தல் நிலையத்தில் காணப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 1,494,764 ஆன மின்பிறப்பாக்கி இயந்திரம் (Generator), பொயிலர் (Boiler), முந்திரிகை தோலிலிருந்து எண்ணை தயாரிக்கும் இயந்திரம் மற்றும் புத்தளம் செயன்முறைப்படுத்தல் நிலையத்தில் காணப்பட்ட பொயிலர் (Boiler) என்பன செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அவற்றினை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நெதகமுவ மரமுந்திரிகை செயன்முறைப்படுத்தல் நிலையத்தில் காணப்பட்ட முந்திரிகை செயன்முறைப்படுத்தும் பொயிலர் 2015 ஆம் ஆண்டிலிருந்து செயற்படாது இருந்ததன் காரணமாக முந்திரிகை தோலினை வேகவைப்பதற்கு (boil) உட்படுத்தி 90 சதவீதத்திற்கும் 95 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவினை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த உற்பத்தி, விளைதிறனானது முந்திரிகை சேதமடைந்திருந்ததன் காரணமாக 70 சதவீதத்திற்கும் 80 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவு வரை வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் காரணமாக முந்திரிகை பருப்பினை விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த வருமானம் 15 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவில் இழக்கப்பட்டிருந்தது.	சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்வதற்கான சிபாரிசினை பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்தின் வேலைகள் திணைக்களத்தின் ஒரு பொறியியலாளரினை உள்ளடக்கி மூன்று நபர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க உரிய குழுவின் சிபாரிசுக்கு இணங்க உரிய சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்பொழுது கூட்டுத்தாபனத்தினால் பின்பற்றப்படுகின்ற செயன்முறைப்படுத்தும் நடைமுறைக்கு இணங்க கூட்டுத்தாபனத்திற்கு வருகை தருகின்ற வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கின்ற முந்திரிகைகளின் சுவை மற்றும் உள்ளார்ந்த நிறங்களை அவ்வாறே வைத்திருக்கலாம். கூட்டுத்தாபனத்தினால் தற்பொழுது முந்திரிகை வெட்டும் இயந்திரத்தின் மூலம் முந்திரிகை வெட்டுதல் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் மூலம் முந்திரிகை பருப்பு துண்டாகுதல் மற்றும் வெடித்தலினை குறைக்கும் இயலுமை காணப்பட்டது. எவ்வாறாயினும் பொயிலரின் மூலம் முந்திரிகை தயாரித்தல் சம்பந்தமாக தொழில்நுட்ப குழுவின் மூலம் முழுமையான ஆய்வினை மேற்கொண்டு ஒப்பீட்டளவில் சாதகமான நடைமுறையை எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பயன்படுத்தப்படாத சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு அல்லது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடியவாறு திருத்தம் செயதல் வேண்டும்.
(உ)	கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கருவா, கராம்பு, வெற்றிலை உள்ளடங்கலாக சிறுதோட்ட பயிர் பயிர்ச்செய்கை அபிவிருத்தி சார்ந்த	தற்பொழுது உரிய அசைம்சு நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தி மிஹிந்தலை, புத்தளம், பூநகரி, மஹாஓயா ஆகிய பிரதேசங்களில்	முடிவடைந்திருகாத வீட்டு நிர்மாணங்களை ஆக்கபூர்வமாக பூர்த்திசெய்து

கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 19,250,752 தொகை ஒதுக்கீடு செய்து 07 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தக்கூடியவாறு கூட்டுத்தாபனத்தினால் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் தம்புள்ளை வணிக நாற்றுமேடை காணியில் ரூபா 2,236,080 தொகையும் மொனராகலை ஹிரிகிவுல காணியில் ரூபா 942,754 தொகையும் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டதனால் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாதிருந்தமையின் காரணமாக அரசாங்க நிதி விளைவற்று செலவு செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட 04 உத்தியோகபூர்வ இல்லங்களில் அந்த நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்டு உரிய உத்தியோகபூர்வ இல்லங்கள் தற்பொழுது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே கூட்டுத்தாபனத்தின் மூலம் இதற்கு முன்னர் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த நாலந்தா தோட்டத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்தின் அத்திவாரம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் அந்த தோட்டம் அமைந்துள்ள காணியின் உரிமையாளரான எல்கடுவ பெருந்தோட்ட கம்பனிக்கு உரிய காணியை மீண்டும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதனால் உரிய உத்தியோகபூர்வ இல்லத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கையை நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

மேலும் மிகுதி 02 உத்தியோகபூர்வ இல்லங்களில் கூட்டுத்தாபனத்தின் தம்புள்ளை வணிக நாற்றுமேடை காணியில் காணப்படுகின்ற 75 சதவிதம் அளவிலான நிர்மாண வேலைகள் முடியவடைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் அந்த நிர்மாண வேலைகளில் காணப்படுகின்றது என அறிக்கையிடப்பட்ட தொழில்நுட்ப குறைபாடுகளை நீக்கி உரிய கட்டிடத்தினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைக்கு மாற்றுவது சம்பந்தமாக மாத்தளை மாவட்ட செயலகத்தின் சிவில் பொறியியலாளரிடமிருந்து உரிய ஆலோசனையை வேண்டிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே ஒரு இரண்டு மாடிக் கட்டிடமாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் தொடக்க நிர்மாண நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ள மொனராகலை பிரதேசத்திலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்திற்காக காணப்படுகின்ற நிதி எற்பாடு பயன்பாட்டிற்கு எடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

		போதியதாக இல்லாததனால் அதனை ஒரு மாடிக் கட்டிடமாக நிர்மாணிப்பதற்கு பிராந்திய தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்து ஒரு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அந்த மதிப்பீடு கிடைத்ததன் பின்னர் அதற்கிணங்க உரிய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	
(ஊ)	2024 ஆம் ஆண்டிற்காக கொண்டச்சி, புத்தளம், ஹாடி, மாங்கேணி, கதுவதுரஆர ஆகிய தோட்டங்களில் வருடாந்த மரமுந்திரிக்காக விளைச்சலின் மொத்தப் பெறுமதி ரூபா 8,276,438 இனை மிகைத்த மொத்த பராமரிப்பு செலவு ரூபா 29,453,821 ஆக இருந்ததனால் நட்டம் ரூபா 21,177,383 ஆக இருந்ததுடன் எலுவன்குளம், கமன்தளுவ, பூநகரி, வெள்ளங்குளம், மஹாஓயா ஆகிய தோட்டங்களின் மரமுந்திரிகை விளைச்சல்களின் மொத்த பெறுமதி 51,384,373 ஆகவும் மொத்த பராமரிப்பு செலவு ரூபா 37,160,015 ஆகவும் இருந்ததனால் இலாபம் 14,402,960 ஆக இருந்தது. அதற்கிணங்க தோட்டங்கள் நட்டம் அடைவதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து பரிகாரம் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.	இதன் போது கமந்தளுவ, புத்தளம், எலுவன்குளம், மஹாஓயா, வெள்ளாங்குளம், பூநகரி ஆகிய தோட்டங்கள் இலாபத்தோடு பேணப்பட்டுள்ளதுடன் ஏனய தோட்டங்களையும் இலாபம் உழைக்கும் மட்டத்திற்கு கொண்டு வருவதற்காக 2025 ஆம் ஆண்டின் போது முறையான ஒரு திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.	தோட்டங்கள் நட்டம் அடைவதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து பரிகாரம் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும்.
(எ)	2024 ஆம் ஆண்டில் மரமுந்திரிகை தோட்டங்களின் இலக்கிடப்பட்ட விளைச்சலினை அந்த ஆண்டின் போது கிடைத்த தோல் முந்திரிகை விளைச்சலுடன் ஒப்பிடும் போது அந்த இலக்கினை அடைந்து கொள்ளும் சதவீதம் 66 சதவீதமாக இருந்தது.	மீளாய்வாண்டின் போது முழு விளைச்சல் இலக்கினை அடைந்துகொள்ளும் சதவீதம் 66 சதவீதமாகும். அவ்வாறே மீளாய்வாண்டின் போது புநகரி தோட்டத்தின் மற்றும் கொண்டச்சி தோட்டத்தின் தோல் முந்திரிகை விளைச்சல் இலக்கினை நிறைவேற்றிக்கொள்ளும் சதவீதம் முறையே 83 சதவீதம் மற்றும் 23 சதவீதமாகும். எவ்வாறாயினும் உரிய ஆண்டில் கமன்தளுவ தோட்டத்தின் தோல் முந்திரிகை விளைச்சல் இலக்கினை நிறைவேற்றிக்கொள்ளும் சதவீதம் 154 சதவீதமாக உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.	தோட்டங்களின் இலக்கிடப்பட்ட விளைச்சலினை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	அனராதபுரம் மாவட்ட விரிவாக்கல் அலுவலகம் அனுராதபுர நகரத்திலுள்ள மரமுந்திரினை நாற்றுமேடை	கூட்டுத்தாபனத்தின் அனுராதபுர பிராந்திய அலுவலகத்தில் தொழில்நுட்ப திறமையுடனான	கூட்டுத்தாபனத்தின் சேவை வழங்குதல் மற்றும் பொருட்களை

	மிஹிந்தலையிலும் அமைக்கப்பட்டிருந்ததன் காரணமாக மரமுந்திரிகை நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பாவனையாளர்கள் அனுராதபுரம் விரிவாக்கல் அலுவலகத்தில் பணத்தை செலுத்தி மரமுந்திரிகை நாற்று மேடைக்குச் சென்று மரமுந்திரிகை நாறறுக்களை கொள்வனவு செய்வதற்கு 14 கிலோ மீற்றர் தூரம் செல்லுவதற்கு மற்றும் அதற்கு மேலதிகமாக செலவுசெய்ய வேண்டும் எனவும் அவதானிக்கப்பட்டது.	ஆளணியினர் மற்றும் போதியளவு இடவசதிகள் இல்லாததனால் நாற்றுக்களின் உத்தரவாம் மற்றும் தரத்தினை பேணிப் பாதுகாக்கக்கூடிய பொருத்தமான நடைமுறையினை அடையாளங்காணும் வரை மிஹிந்தலை நாற்று மேடையிலிருந்து நாற்றுக்களை வழங்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் நாற்றுக்களை கொள்வனவு செய்கின்ற பாவனையாளர்கள் அது தொடர்பான பணத்தை வங்கியில் வைப்புச் செய்து அந்த பற்றுச்சீட்டினை நாற்றுமேடையில் சமர்ப்பித்து நாற்றுக்களைப் பெற்றுக்கொவதற்கான வாய்ப்பினை வழங்கும் ஒரு நடைமுறையினை அறிமுகப்படுத்துதல் தொடர்பாக ஆய்வு செய்ய்ப்பட்டு வருவதுடன் அதற்கிணங்க எதிர்கால தீர்மானங்களை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வழங்குதலானது பாவனையாளர்களுக்கு இலகுவான வகையில் மேறகொள்ளப்படுதல் வேண்டும்.
(ஐ)	கூட:டுத்தாபனத்தினால் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது கொண்டச்சி தோட்டத்தில் 472 ஏக்கர்களில் புதிய மரமுந்திரிகை நாற்றுக்கள் நடுகை செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மரமுந்திரிகை நாற்றுகளை பயிரிடுதல் சராசரியாக ஒரு ஆண்டிற்கு 157.33 ஏக்கர்களாகும். மரமுந்திரிகை நாற்றுக்களை பயிரிடும் ஆற்றலுக்கு இணங்க மரமுந்திரிகை நாற்றுக்கள் பயிரிடப்படாத போதிலும் மரமுந்திரிகை நாற்றுக்களை பயிரிடக்கூடிய அளவான 3,078 ஏக்கர்களில் மரமுந்திரிகை நாற்றுக்களை பயிரிடுவதற்கு 19.5 ஆண்டுகள் எடுத்திருந்தது என அவதானிக்கப்பட்டது.	இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தினால் இந்த கொடண்டச்சி தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. எனினும் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையினை முன்னிட்டு துரிதமாக தோட்டத்தை அபிவிருத்தி செய்யும் இயலுமை இல்லை. எனவே வெளித்தரப்பினர்களுடன் ஒன்றிணைந்து இந்த நிலத்தை படிப்படியாக அபிவிருத்தி செய்து புதிய பயிர்ச்செய்கையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மரமுந்திரிகை நாற்றுக்களை பயிரிடும் நடவடிக்கையை ஆக்கபூர்வமாக பூர்த்திசெயயவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஒ)	2024 ஆம் ஆண்டின் போது கொண்டச்சி தோட்டத்தில் கூட்டுத்தாபனம் நிருவகிக்கின்ற பகுதியில் புதிய பயிர்ச் செய்கைக்காக 340 ஏக்கர் நிலம் வெளியாக்கப்பட்டிருந்தும் நடுகை செய்வதற்காக பொருத்தமான 23,800 நாற்றுக்கள் கிடைக்காமையின் காரணமாக அந்த நில அளவில் புதிய மரமுந்திரிகை நாற்றுக்கள் பயிரிடப்பட்டிருக்கவில்லை.	கொண்டச்சி தோட்டத்தில் கூட்டுத்தாபனத்தின் சொந்தமானத்தில் புதிய மரமுந்திரிகை இனங்களிலிருந்து மாத்திரம் நடுகைசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் விவசாயிகளுக்கு தரமான மரமுந்திரிகை நாற்றுக்களை வழங்கும் போக்கினை அதிகரிக்கலாம். தோட்டத்தில் ஒட்டு மரமுந்திரிகை நாற்றுக்களை நடுகை செய்தலானது	புதிய மரமுந்திரிகை நாற்றுக்களை பயிரிடும் நடவடிக்கை ஆக்கபூர்வமாக செய்யப்படுதல் வேண்டும்.

		முறைப்படியான பயிர்ச்செய்கை முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படுவதனால் உரிய பயிர்ச்செய்கை பகுதிக்குத் தேவையான ஒட்டு மரமுந்திரிகை நாற்றுக்களின் அதிகரித்தல் போதியதாக இல்லாததன் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டின் போது நாற்றுக்களை நடுகை செய்தல் இடம்பெறவில்லை. எவ்வாறாயினும் கொண்டச்சி தோட்டத்தின் C மற்றும் E பகுதிகளில் புதிய இனங்களுக்கு கொண்டுவரப்பட்ட ஒட்டு மரமுந்திரிகை நாற்றுக்களை நடுகை செய்யும் நடவடிக்கை தற்பொழுது முடிவடைந்துள்ளது.	
(ஓ)	கொண்டச்சி தோட்ட காணியை குறுங்கால குத்தகைக்கு வழங்குவதன் மூலம் குத்தகைதாரர்களினால் குறுங்கால விளைச்சலினைப் பெற்றுக்கொள்வதற்காக மாத்திரம் நிலத்தை பாராமரிப்பதுடன் மரங்களின் வேர்களைப் பிடுங்குதல், வேலி அமைத்தல், மண் அடித்து செல்வதை தடுத்தல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. ஒரே நிலப் பகுதியினை 02 ஆண்டுகளுக்கும் 03 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் ஒரே குத்தகைதாரருக்கு வழங்குவதன் மூலம் பயிர்ச் செய்கை நிலத்தை பராமரிப்பதன் மூலம் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்ளக்கூடிய பிரதிபலன்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த தோட்டம் வில்பத்து சரணாலயத்தின் எல்லையில் இருப்பதன் காரணமாக காட்டு யானைகளின் ஆக்கிரமிப்பின் மூலம் மரமுந்திரிகை விவசாயத்திற்கு சேதம் ஏற்பட்டிருந்தது. வரிசை அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் காட்டு யானைகள் தோட்டத்திற்குள் வருவதனை தடுப்பதற்காக யானை வேலிகளை நிர்மாணித்தல் 2021 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்தும் 2024 திசெம்பர் வரை அந்த யானை வேலியை நிர்மாணித்தல் ஆரம்பிகப்பட்டிருக்கவில்லை.	தற்பொழுது கொண்டச்சி தோட்டத்தில் குறுங்கால உப பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளுகின்ற வெளி விவசாயிகளின் மூலம் மரமுந்திரிகை நாற்றுக்கள் மற்றும் பயிர்ச் செய்கை நிலம் 06 மாதங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் மூலம் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை மற்றும் நிலம் முறைப்படியான பராமரிப்புக்கு உட்படும். தற்பொழுது புதிய நடைமுறைகளுக்கு இணங்க குத்த சில விவசாயிகளுக்கு 90 ஏக்கர் நிலப்பகுதியினை முன்னோடி செயற்திட்டமாக வருடாந்தம் நீடிப்புச் செய்யும் அடிப்படையில் உடன்படிக்கை செய்து உப பயிர்களை பயிர்ச்செய்கை செய்யும் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அதன் வெற்றித்தன்மைக்கு இணங்க இதற்காக நிதி இயலுமை காணப்படும் விவசாயிகளை அடையாளங்கண்டு உப பயிர் பயிர்ச்செய்கைக்காக தோட்டத்தின் நிலப் பகுதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொண்டச்சி தோட்டத்தை சுற்றி யானை வேலிகளை நிர்மாணிப்பதற்காக தற்பெழுது காணப்படுகின்ற நிதி ஏற்பாடுகளுக்கு இணங்க திருத்திய	குறுங்காலத்திற்கு குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கை மற்றும் யானை வேலிகளை நிர்மாணிக்கும் நடவடிகைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		ஒரு மதிப்பீடு தற்பொழுது கிடைத்துள்ளதுடன் அதற்காக புதிய ஒரு கேள்வி மதிப்பீட்டுக் குழுவினை நியமித்ததன் பின்னர் உரிய மிகுதி நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த யானை வேலியை நிர்மாணிக்கும் நடவடிக்கையை தரிதமாக பூர்த்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	
(ஒள)	மன்னார் மாவட்டத்திலுள்ள கொண்டச்சி தோட்டத்தில் சிவில் பாதுகாப்பு படையினால் கட்டுப்படுத்தப்படுகின்ற பகுதியின் 1,435 ஏக்கர்களில் 935 ஏக்கர்களில் மாத்திரம் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதுடன் 500 ஏக்கர்கள் பிரதேசம் பயன்படுத்தப்படாது காடு வளர்ந்து விளைவற்றுக் காணப்பட்டது.	இதில் குறிப்பிட்ட 500 ஏக்கர் நிலப்பகுதி கூட்டுத்தாபனத்தினால் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு மரமுந்திரிகை பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலப்பகுதியில் இது வரை மரமுந்திரிகை பயிர்ச் செய்கை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்காமை சம்பந்தமாக சிவிவ் பாதுகாப்பு திணைக்களத்தின் உரிய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன் போதியளவு நிதி எற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் துரிதமாக உரிய காணிப் பகுதியில் மரமுந்திரிகை பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த உத்தியோகத்தர்களால் தெரியப்படுத்தப்பட்டது.	நிறுவனத்தின் வளங்களை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(க)	மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் பொறுப்பேற்காத காணிகளை உபகுத்தகைக்கு வழங்கமுடியாத போதிலும் கொண்டச்சி தோட்டத்தின் கிழக்கு எல்லையில் கல்லாறு ஓயா அமைந்துள்ள பிரதேசத்தின் 02 ஏக்கர் காணியில் உடன்படிக்கை செய்யப்படாது மின்சார சபையின் ஒரு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது அந்த நிர்மாணங்களுக்காக எந்த குத்தகையோ அல்லது வாடகை வருமானமோ பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இச்செயற்திட்டம் தொடர்பாக 2025-07-03 ஆந் திகதி உரிய அமைச்சர்கள் மற்றும் அமைச்சு செயலாளர்களின் பங்குபற்றலில் நடைபெறற கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன் அதன் போது இக்கூட்டுத்தாபனத்திற்கு பிரதிபலன் கிடைக்கும் வகையில் உரிய செயற்திட்டத்தினை மேற்கொள்வதற்காக கருத்துக்கள் பரிமாற்றப்பட்டன. அதற்கிணங்க உரிய தீர்மானத்தை கூட்டுத்தாபனத்திற்கு தெரியப்படத்தியதன் பின்னர் அதற்கு நேரொத்த வகையில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	குத்தகை அல்லது வாடகை வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வண்டும்.

(கா)	வெளி நபர்களினால் சுதுவதுர ஆர தோட்டத்தில் 155 எக்கர் காணி கைப்பற்றப்பட்டிருந்ததுடன் தோட்டம் கூட்டுத்தாபனத்தின் பெயரில் பொறுப்பேற்கபபட்டிருக்காமையின் காரணமாக அந்த வெளிநபர்களை வெளியேற்றுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு முடியவில்லை. இதற்கிணங்க அரசாங்க காணிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.	சுதுவதுர ஆர விதைத் தோட்டத்தின் 155 ஏக்கர் காணி வெளி நபர்களால் கைப்பற்றப்பட்டிருதமை சம்பந்தமாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டு உரிய பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்காணியின் உரிமை பிரரேச செயலகத்திடம் காணப்படுவதனால் இது தொடர்பான தலையீட்டினை அவர்களால் செய்ய வேண்டி காணப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் மூலம் அதற்காக தேவையான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அனுமதியற்ற குடியிருத்தல்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கி)	2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கூட்டுத்தாபனம் பயன்படுத்துகின்ற 9,056 ஏக்கர்களில் 1,083 ஏக்கர்கள் மரமுந்திரிகை பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாததுடன் 7,973 ஏக்கர்கள் மரமுந்திரிகை பயிர்ச் செய்கை மேற்கொள்ள கூடியதாக இருந்தது. அவற்றில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நில அளவு 3,487 ஏக்கர்களாக இருந்தது. அதற்கிணங்க மரமுந்திரிகை பயிர்ச் செய்கை பண்ணப்படாது விளைவற்று இருந்த போதிலும் பயிர்ச்செய்கை பண்ணக்கூடிய காணியின் அளவு 4,486 ஏக்கர்களாக இருந்ததுடன் கூட்டுததாபனம் பயன்படுத்தக்கூடிய காணியின் அளவில் 56.2 சதவீதமானது பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.	பயிரிடப்படக்கூடிய காணி அளவில் பயிரிடப்படாது மிகுதியாக உள்ள 4,486 ஏக்கர் காணி இந்த கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக உள்ளதானது யுத்த நிலைமையின் பின்னர் அதாவது 2014, 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போதாகும். அதற்கிணங்க இக்காணி கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்து தற்பொழுது கடந்துள்ள உச்ச அளவு காலத்தை கருத்தில் கொள்கையில் அது 10 ஆண்டுகள் ஆனதுடன் அக்காலத்தின் போது 1,700 ஏக்கர்கள் அளவிலான புதிய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின் மூலம் உரிய தோட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. காணப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் உயர்ந்த விலைகளின் காரணமாக அபிவிருத்திக்காக மிகவும் அதிக கிரயம் செலவு செய்யப்படுவதனால் அதற்கிணங்க ஒரு ஆண்டிற்கு அபிவிருத்தி செய்யக்கூடிய காணிகளின் அளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இக்காணியைப் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான திட்டங்கள் தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளது.	காணி அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக மேற்கொண்டு வினைத்திறனாக வளங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(கீ)	கூட்டுத்தாபனத்தினால் ஒட்டு மற்றும் விதை மரமுந்திரிகைகள் பயிர்ச் செய்கை பண்ணப்பட்ட 3,487 ஏக்கர்களில் 3,410 ஏக்கர்கள் விளைச்சல் பெற்றுக்கொள்ளும் காணியாக இருந்ததுடன் விளைச்சல் பெற்றுக்கொள்ளும் மரங்களின் எண்ணிக்கை 48,613 ஆக இருந்தது. ஓர் ஏக்கருக்கு பயிர்ச்செய்கை பண்ணக்கூடிய ஒட்டு மரமுந்திரிகை மரங்களின் எண்ணிக்கை 70 ஆக கூட்டடுத்தாபனம் காட்டியிருந்தது. அதற்கிணங்க ஒரு ஏக்கரில் பயிரிடப்பட்ட விளைச்சல் தரும் ஒட்டு மரங்களின் எண்ணிக்கை 14 ஆக இருந்தது. அதற்கிணங்க கூட்டுத்தாபனம் மரமுந்திரிகை மரங்களை பயிரிடும் போது செயற்திறனின்மை காணப்பட்டது.	2024-03-27 ஆந் திகதி வரை கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களில் விளைச்சலுடனான மரமுந்திரிகை பயிர்ச் செய்கை ஏக்கர்களின் எண்ணிக்கை 1,696 ஆகும். 2024 ஆம் ஆண்டிற்கான அறிக்கைகளுக்கு இணங்க விளைச்சலுடனான மரமுந்திரிகை மரங்களின் எண்ணிக்கை 55,724 ஆகும். இதற்கிணங்க ஒரு ஏக்கரில் காணப்படுகின்ற சராசரி மரங்களின் எண்ணிக்கை அண்ணளவாக 33 ஆகும். இக்கூட்டுத்தாபனத்தின் கமன்தளுவ, வெள்ளாங்குளம், பூநகரி ஆகிய தோட்டங்களில் பொதுவாக காணப்படுவது ஒரு ஏக்கருக்கு 40 நாற்றுக்கள் வீதம் நடுகை செய்யப்பட்ட விதை மரமுந்திரிகை பயிர்ச்செய்கை ஆனதுடன் கொண்டச்சி தோட்டத்தில் சில பகுதிகளில் ஒரு ஏக்கருக்கு 50 நாற்றுக்கள் வீதம் பயிர்ச்செய்கை பண்ணப்பட்ட காணிப் பகுதியும் குறிப்படத்தக்க அளவில் காணப்பட்டது. இந்நிலைமையின் அடிப்படையில் ஒரு ஏக்கருக்கு 39 மரமுந்திரிகை நாற்றுக்கள் காணப்படுவது நடைமுறைச் சாத்தியமானதாகும்.	மரமுந்திரிகை பயிர்ச் செய்கையினை ஆக்கபூர்வமாக செய்தல் வேண்டும்.
(கு)	கூட்டுத்தாபனத்தினால் ஒரு ஏக்கர் காணீயில பயிரிடக்கூடிய ஒட்டு மரமுந்திரிகை மரங்களின் எண்ணிக்கை 70 ஆக காட்டப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகளில் புதிதாக பயிர்செய்கை செய்யப்பட்ட மரமுந்திரிகை நாற்றுக்களின் எண்ணிக்கை 68,215 ஆக இருந்ததுடன் நிலத்தின் அளவு 1,161 ஏக்கர்களாக இருந்தது. அதற்கிணங்க ஒரு ஆண்டின் போது புதிதாக பயிரிடப்படுகின்ற மரமுந்திரிகை நாற்றுக்களின் எண்ணிக்கையின் சராசரி 13,643 ஆக இருந்ததுடன் (68,215/5 = 13,643) அபிவிருத்தி செய்யக்கூடிய 4,486 ஏக்கர்களில் 314,020 (4,486X70) ஒட்டு மரமுந்திரிகை நாற்றுக்களை பயிரிடக்கூடியதாக இருந்ததுடன் புதிய மரமுந்திரிகை நாற்றுக்கள் பயரிடப்பட்ட நிலத்தின் அளவின் வருடாந்த சராசரி 232.2 ஏக்கர்களாக (1,161/5 =232.2) இருந்தது. அதற்கிணங்க பயிடப்படாத மற்றும் அபிவிருத்தி செய்யக்கூடிய	கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களில் தற்பொழுது பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாது மிகுதியாகக் காணப்பட்ட 4,486 எக்கர் அளவினை அபிவிருத்தி செய்வதற்கு எடுத்த காலத்தினை தீர்மானிப்பது இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் இயலளவு, (உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை இயந்திரங்களின் அளவு) வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டின் அளவு மற்றும் காணப்படுகின்ற பிரச்சினைக்காக தீர்வினைப் பெற்றுக்கொள்ளல் (யானை வேலி நிர்மாணித்தல்/ காணிகளின் உரிமையை தீர்த்துவைத்தல்/ நிலுவை குத்தகைப் பணத்தை செலுத்துதல்/ காணிகளின் நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்) ஆகிய காரணிகளின் அடிப்படையிலாகும்.	மரமுந்திரிகை பயிர்செய்கையை ஆக்கபூர்வமாக மேற்கொண்டு வினைத்திறனாக வளங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	4,486 ஏக்கர்களில் புதிய மரமுந்திரிகைகளை பயிரிடுவதற்காக 19 ஆண்டுகள் எடுத்திருந்தது என அவதானிக்கப்பட்டது.		
(கூ)	கூட்டுத்தாபனத்தின் மரமுந்திரிகை மரங்களுக்கு 2018 ஆம் ஆண்டிலிருந்து 2024 நவம்பர் மாதம் வரையான காலத்தில் பசளை இடப்படாதிருந்ததுடன் 2024 திசெம்பர மாதத்தின் போது எலுவன்குளம், பத்தளம் மற்றும் ஹாடி தோட்டங்களுக்காக 10,850 கி.கிராம் யூரியா பசளை 6,000 கிலோ கிராம் எம்.ஓ.பீ 13,000 கிலோகிராம் ஈ.ஆர்.ஜீ என்பனவாக மொத்தமாக 29,850 கி.கிராம் வழங்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் இறுதி வரை அந்த பசளை இருப்பில் 9,340 மரமுந்திரிகை மரங்களுக்கு 12,950 கிலோ கிராம் பசளை மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதியான 16,900 கிலோ கிராம் பசளை தோட்டங்களின் களஞ்சியங்களில் பயன்படுத்தப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. மரமுந்திரிகை மரமுந்திரிகை மரங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் பசளை இடுவதற்கு தவறியிருந்தமை மரமுந்திரிகை விளைச்சல் குறைவடைவதற்கு தாக்கமளித்திருந்தது.	நடைமுறை நிலைமைகளின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகளில் இடம்பெற்ற கூட்டுத்தாபனத்தினால் கட்டுப்படுத்த முடியாத தாமதங்களின் காரணமாக மரமுந்திரிகை பசளை வழங்குதலும் தாமதமடைந்தது. அதற்கிணங்க தோட்டங்களுக்கு 2024-12-19 ஆந் திகதியே பசளைகள் எடுத்துச் செல்லப்பட்டன. இந்த நிலைமையின் அடிப்படையில் கொள்வனவு செய்த அனைத்து பசளைகளையும் 2024-12-31 ஆந் திகதிக்கு முன்னர் ஈடுபடுத்தி முடிவுறுத்துதல் மேற்கொள்ளப்பட முடியாததுடன் உரிய பசளை 2025 ஆம் ஆண்டின் தொடக்க காலாண்டின் போது பயிர்ச்செய்கைகளுக்கு ஈடுபடுத்தும் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டுள்ளது.	நிர்ணயிக்கப்பட்ட காலங்களில் பசளை ஈடுபடுத்தப்படுதல் வேண்டும்.
(கெ)	அரசாங்கத்தினால் கொள்கைரீதியான திட்டங்களை தயாரிக்கும் போதும் துறைக்கு நானாவிதமான அனுசரணைகளை வழங்கும் போதும் அரசாங்க பொறிமுறைக்குள்ளே பல்வேறு நிறுவனங்களுக்கு சரியான தகவல்களை வழங்கும் நோக்கத்தில் மரமுந்திரிகை துறையில் ஈடுபட்டிருக்கின்ற தொழில் முயற்சியாளர்களைப் பதிவுசெய்வதற்காக இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் 2024 பெப்ரவரி 20 ஆந் திகதிய SLCC/EXT/02/11/2024 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் 558 ஆம் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2024 திசெம்பர் முடிவடைகையிலும் இலங்கையில் இருக்கின்ற மரமுந்திரிகை துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தல் முடிவடைநதிருக்கவில்லை.	மரமுந்திரிகை துறையில் ஈடுபடுகின்ற தொழில் முயற்சியாளர்களை கூட்டுத்தாபனத்தினால் பதிவுசெய்து கொள்வதற்காக பகிரங்கமான பத்திரிகை அறிவித்தலின் மூலம் பொதுவாக உரிய தரப்பினர்களுக்கு தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதற்காக அத்தரப்பினர்களிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. அதற்கிணங்க கூட்டுத்தாபனத்தின் வரிவாக்கல் பிரிவின் ஆளணியினர் உஉரிய தொழில்முயற்சியாளர்கள் தொடர்பான தகவல்களை வழங்கும் செயற்பாட்டினை முடியுமான அளவிற்கு உச்ச முறைமையில் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதற்காக தற்பொழுது உரிய	மரமுந்திரிகை கைத்தொழிலுக்குரிய தகவல்களை சேகரித்தலினை துரிதப்படுத்துதல் வேண்டும்.

		மாவட்டங்களில் பிரதேச செயலகங்களின் தகவல்களையும் சேகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	
(கே)	கொண்டச்சி தோட்டத்தின் மீளமைப்பு செயற்பாட்டின் போது கட்டிடங்களுக்காக தோட்டத்தின் மரங்களை வெட்டி மரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அந்த மரங்களை வெட்டும் போது பாதுகாக்கப்பட்ட மரங்களாக பெயரிடப்பட்டுள்ள மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக அனுமதியின்றி பயன்படுத்த முடியாத கருங்காலி, கருப்பு பெட்டி போன்ற மரங்கள் சுற்றாடல் அமைச்சு செயலாளரின் 04/2010 ஆம் இலக்க 2010 திசெம்பர் 29 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு முரணாகவும் உத்தியோகத்தர்களின் அங்கீகாரமின்றியும் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களின் விருப்புக்கு இணங்க திணைக்கள சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய உரிய சட்டவிதிகளை மீறி வெட்டப்பட்டு மரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.	இதன் கீழ் காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களில் உள்ளடக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று விசாரணைகள் தற்பொழுது மேற்கொள்ளப்படுவதனால் அதன் பெறுபேறுகளுக்கு இணங்க எதிர்காலத்தல் தீர்மானம் எடுப்பதற்கு நிரணயிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க உரிய விசாரணைகளுடன் தொடர்புபட்ட விடயங்களுக்குரிய தகவல்களைச் சமர்பபித்தல் சட்ட ரீதியாக பிரச்சினைக்குரியது என்பதனால் அந்த விசாரணைகள் முடிவடைந்ததன் பின்னர் இந்த அவதானிப்புக்களுக்குரிய தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் இயலுமை காணப்படுகின்றது.	அரசாங்கத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கை)	மரமுந்திரிகை நாற்று மேடைகளின் 2024 ஆம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதனை பரீட்சித்த போது 2024 ஆம் ஆண்டின் இறுதியில் அனைத்து வெற்றிகரமான ஒட்டு மரமுந்திரிகைகளும் நாற்றுமேடைக்கு வெளியே பயிர்ச்செய்கை பண்ணும் நிலத்திற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் பலவீனமான முகாமைத்துவத்தின் காரணமாக மஹியங்கனை மற்றும் ஹாடி.்.கிரான் மரமுந்திரிகை நாற்றுமேடைகளில் ஒரு மரமுந்திரிகை நாற்றையேனும் துறைக்கு விடுவிக்க தவறியிருந்தது. மேலும் மஹியங்கனை மற்றும் மங்களகம மரமுந்திரிகை நாற்றுமேடைகளின் மரமுந்திரகை நாற்றுக்கள் மரணமடையும் சதவீதமானது 15 சதவீதம் அளவில் உயர்நத பெறுமதியை கொண்டிருந்தது.	2024-12-31 ஆந் திகதி வரை ஒட்டுமொத்த நாற்று மேடைகளில் மிகுதியாகக் காணப்பட்ட வெற்றியளித்த ஒட்டு மரமுந்திரிகை நாற்றுக்களின் அளவு 159,379 ஆகும். அதுவரை மஹியங்கனை நாற்றுமேடையின் வெற்றியளித்த ஒட்டு மரநாற்றுக்கள் 8,538 எண்ணிக்கையும் ஹாடி நாற்று மேடையின் ஒட்டு மரமுந்திரிகை நாற்றுக்கள் 23,879 எண்ணிக்கையும் மிகுதியாக காணப்பட்டன. அதற்கிணங்க மேற்கூறிய நாற்று மேடைகளிலிருந்து 2024-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு இளம் நாற்றுக்களை விடுவிப்பதற்கு எந்த தடையும் காணப்படாத போதிலும் நடைமுறை நிலைமையின் அடிப்படையில் நிவாரண திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய நாற்றுக்களை விவசாயிகள் எடுத்துச் செல்லும் போது தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறே இதில் குறிப்பிட்டுள்ளவாறு மஹியங்கன	திட்டமிடப்பட்டவாறு பதிய மரமுந்திரிகை பயிர்ச் செய்கையை ஸ்தாபித்தல் வேண்டும்.

		மற்றும் மங்களகம நாற்று மேடைகளில் நாற்றுக்கள் மரணித்தல் சதவீதம் அதிகரித்திருந்ததானது பூஞ்சன நோய் தொற்று பரவுவதன் காரணத்தினாலாகும். எவ்வாறாயினும் முடியுமான அளவுக்கு அந்த நிலைமையை கட்டுப்படுத்தி நாற்று உற்பத்தி நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.	
(கொ)	மீளாய்வாண்டின் இறுதி வரை மரமுந்திரிகை பயிரிடப்பட்ட நிலஅளவு அண்ணளவாக 3,487 ஏக்கர்களின் விளைச்சல் தரும் மரங்களின் எண்ணிக்கை 55,724 ஆகும். அந்த மரங்களின் எழுதப்பட்ட தேறிய பெறுமதி ரூபா 70,304,127 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தும் அந்த மரமுந்திரிகை மரங்களின் தொகை மதிப்பினை மேற்கொள்ளல், மரங்களுக்கு இலக்கமிடல் மற்றும் மரங்கள் தொடர்பான பதிவேட்டினைத் தயாரித்தல் மேற்கொள்ளப்படவில்லை.	கடந்த ஒவ்வொரு ஆண்டிலும் மரமுந்திரிகை மரங்களின் தொகை மதிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தும் அந்த அந்த தோட்டங்களில் காணப்பட்ட வருடாந்த வருமானம் செலவுகளின் நிலைமையின் அடிப்படையில் மரமுந்திரிகை மரங்களில் இலக்கமிடுவதற்காக அதிக செலவு செய்ய வேண்டி இருப்பதனால் அந்த நடவடிக்கையை பூரணப்படுத்துவதற்கு முடியாதுள்ளது. எவ்வாறாயினும் தற்பொழுது பூநகரி, வெள்ளாங்குளம் ஆகிய தோட்டங்களில் காணப்படுகின்ற மரமுந்திரிகை மரங்களுக்கு இலக்கமிட்டு மரப் பதிவேட்டினைத் தயாரிப்பதற்காக தேவையான பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் காணப்படுகின்ற நிதி எற்பாடுகளுக்கு இணங்க மிகுதி தோட்டங்களிலும் மரங்களுக்கு இலக்கமிட்டு மரப் பதிவேட்டினை தயாரிக்கும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	மரமுந்திரிகை மரங்களை தொகை மதிப்புச் செய்து அவற்றினை இலக்கமிடுதல் மற்றும் மரம் தொடர்பான பதிவேட்டில் உள்ளடக்குதல் செய்யப்படுதல் வேண்டும்.
(கோ)	நிறுவனத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் குறியீடு செய்யப்படாதிருந்ததன் காரணமாக சொத்துக்களை தனித்தனியாக அடையாளங்காண முடியாதுள்ளது. அதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 285,684,612 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் உள்ளமை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.	கூட்டுத்தாபனத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு நடவடிக்கைகளின் போது நெதகமுவ மற்றும் புத்தளம் செயன்முறைப்படுத்தல் நிலையங்கள், கூட்டுத்தாபனத்தின் 05 விற்பனை நிலையங்ளக் மற்றும் புத்தளம் பிராந்திய அலுவலகத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தை உள்ளடக்கி ஏனைய அனைத்து தோட்டங்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்காக	நிறுவனத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு குறியீடு செய்தல் வேண்டும்.

		சொத்துக்களை வகைப்படுத்தும் குறியீட்டினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நடைமுறை ஆண்டின் போது அதாவது 2025 ஆம் ஆண்டின் போது பொருள் மீளாய்வு நடவடிக்கைகளுக்கு சமாந்தரமாக தற்பொழுது சொத்துக்களுக்கு குறியீடு அறிமுகப்படுத்தப்படாதுள்ள கடமை சுற்றாடல்களுக்காகவும் குறியீட்டினை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையை பூரணப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	
(கௌ)	இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தும் 2024 ஒக்தோபர் 27 ஆந் திகதி வரையான காலத்தில் கூட்டத்தாபனத்தின் கட்டுப்பாடின்றி சாரதியின் சேவையுடன் அவருக்கு வழங்கப்பட்டிருந்த கெப் வாகனம் 2069 கிலோ மீற்றர் தனிப்பட்ட செயற்பாடுகளுகாக ஓடியிருந்தது.	இந்த முன்னாள் பிரதித் தலைவர் உரிய பதவியிலிருந்து 2024-10-04 ஆந் திகதி தொடக்கம் நீக்கப்பட்டுள்ளார் என விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் மூலம் முறைப்படியாக கூட்டுத்தாபனத்திற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததானது 2024-11-12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் என்பதனால் இணைத்துக்கொள்ளப்பட்ட வாகனங்களின் ஓட்டத் தகவல்களை நாளாந்தம் பதிவுசெய்கின்ற பதிவேட்டின் பிரகாரம் 2024-10-04 ஆந் திகதியிலிருந்து 2024-10-28 ஆந் திகதி வரை அவரினால் கூட்டுத்தாபனத்தின் PF-9521 ஆம் இலக்க வாகனம் (டபிள் கெப் வாகனம்) ஓடுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் உரிய காலப்பகுதிக்காக அச்செயற்பாட்டிற்காக அவருக்கு எரிபொருள் படிக் கொடுப்பனவோ அல்லது வேறு எந்த கொடுப்பனவோ கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படவில்லை.	கடமையிலிருந்து நீக்கப்பட்ட காலத்தில் டபிள்கெப் வாகனத்தை பயன்படுத்தயமைக்குரிய கிரயத்தை அறவீடு செய்தல் வேண்டும்.

3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் ரூபா 13,845,266 இலாபம் உழைத்தமைக்கு முன்மைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விற்பனை வருமானம் ரூபா 86,160,509 ஆல் அதிகரித்துக் காணப்பட்டமை பிரதான காரணமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. அண்ணளவாக 05 ஆண்டுகளில் அதாவது 2020 இலிருந்து 2024 வரையான காலப்பகுதியின் போது அரசாங்க மானியத்தை பொருட்படுத்தாது கடந்த 05 ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் கட்புலனாகும் நட்டம் ரூபா 148,049,770 இலிருந்து ரூபா 102,312,533 வரையான வீச்சில் காணப்பட்டது. இதற்கிணங்க தொடர்ச்சியாக நட்டம் அடைதல், ஆளணியினர் வெற்றிடம், காணப்படுகின்ற மரமந்திரிகை தோட்டங்கள் உச்ச அளவில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளாமையால் உற்பத்தி குறைவடைதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலானது சவாலுக்குரியதாக உள்ளது என அவதானிக்கப்பட்டது.	பாதகமான நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்காக வருமானத்தை பல்வகைப்படுத்துவதற்கு தேவையான சட்டரீதியான பிண்ணனியை தயாரிப்பதற்கும் நீண்ட கால ஆராய்ச்சி நடவடிக்கைகளின் மூலம் காலநிலை மாற்றங்களின் போது விளைச்சல் இடைவெளிகளை குறைக்கும் இனங்களை அறிமுகப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3.3 நிதிகளின் குறைந்த பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கொண்டச்சி தோட்டத்தை புனரமைத்தல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நவீனமயப்படுத்துவதற்காக 2021 ஆம் அண்டின் போது வரிசை அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 225,000,000 பணத்தை பயன்படுத்தும் பலவீனத்தின் காரணமாக 2021, 2022, 2023 மற்றும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதிகளில் உள்ளவாறு முறையே ரூபா 168 மில்லியன், ரூபா 146 மில்லியன், ரூபா 132 மில்லியன் மற்றும் ரூபா 62 மில்லியன் அரசாங்க பணம் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டு சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. மேலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொண்டச்சி தோட்டத்தினை மீளமைப்புச் செய்வதற்காக கிடைத்த பணத்தின் மிகுதிப் பணத்தையும் உள்ளடக்கி சேமிப்பு வங்கி கணக்கில் காணப்பட்ட ரூபா 101.40 மில்லியன் மீதி மற்றும் 2024 ஆம் ஆண்டிற்கான செலவுகளை மிகைத்த மிகைப் பணத்தையும் ஆக்கபூர்வமாக முதலீடு செய்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.	கொண்டச்சி தோட்டத்தை மீளமைப்புச் செய்தல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நவீனமயப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது வரிசை அமைச்சிடமிருந்து பெற்ற ரூபா 225 மில்லியன் பணத்தை இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்து கொண்டச்சி தோட்டத்தின் தேவைப்பாட்டிற்கு இணங்க இன்றுவரை பணம் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அப்பணத்தில் 2025-06-30 ஆந் திகதியளவில் காணப்பட்ட மீதி ரூபா 45.35 மில்லியன் பெறுமதியாக இருந்ததனால் உரிய தோட்டத்தின் நடவடிக்கைகளுக்கு இணங்க அடுத்துவரும் குறுகிய காலத்திற்கள் அப்பணமும்	மிகையாக மற்றும் விளைவற்றதாக காணப்படும் பணத்தை உச்ச அளவு பிரதிபலன்கள் கிடைக்கும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும்.

	பயன்படுத்தப்படுவதனால் உரிய காசு மீதியை முதலீடு செய்வதற்காக ஈடுபடுத்தும் இயலுமை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகும்.	

3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நெதகமுவ மற்றும் புத்தளம் செயன்முறைப்படுத்தல் நிலையங்களின் மரமுந்திரிகை செயன்முறைப்படுத்தும் செயற்பாட்டிற்காக ரூபா 8,100,000 மற்றும் ரூபா 9,030,000 செலவு செய்து கொள்வனவு செய்த மரமுந்திரிகை பொதிசெய்யும் இயந்திரம் மற்றும் மரமுந்திரிகை செயன்முறைப்படுத்துவதனை வினைத்திறனாக்குவதற்காக கொள்வனவு செய்த 02 இயந்திரங்கள் 2024 திசெம்பர 31 ஆந் திகதி வரை பயன்படுத்த முடியாது விளைவற்றுக் காணப்பட்டமை சம்பந்தமாக பரீட்சித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த இயந்திரத்தினை கொள்வனவு செய்தமை சம்பந்தமான பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தொடக்க புலனாய்வு நடவடிக்கையை ஒப்படைப்பதற்காக அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் அடிப்படையில் அரசாங்க நிருவாக புலனாய்வு அதிகாரிகள் குழுவிலிருந்து பொருத்தமான ஒரு உத்தியோகத்தரினை நியமிப்பதற்காக தொடர்ச்சியாக முய்றசி எடுக்கப்பட்டிருந்தும் அதற்காக ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர் எவரும் தொடக்க புலனாய்வு நடவடிக்கைளை பொறுப்பேற்காததனால் உரிய செயற்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.	இயந்திரங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு அல்லது ஏனைய தோட்டங்களுக்கு வழங்கி பயன்படுத்துதல் வேண்டும்.

3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	4,338 ஏக்கர் பரப்பளவுள்ள கொண்டச்சி தோட்டத்தின் செயற்பாடுகளுக்காக பதில் கடமை பார்க்கும் ஒரு தோட்ட அத்தியட்சகர், ஒரு சாரதி, ஒரு காவலாளர், ஒரு வெளிக்கள உதவியாளர் ஆகியோர் நிரந்தர பதவியணியாக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் பாரிய அளவிலான தோட்டத்தை நிருவகிப்பதற்காக அந்த ஆளணியினர் போதியதல்ல என அவதானிக்கப்பட்டது.	கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை சிறப்படைந்த உடன் தேவைக்கேற்றவாறு கொண்டச்சி தோட்டத்தில் வெற்றிடமாக உள்ள பதவிகளை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	தேவையான ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.
(ஆ)	கொண்டச்சி தோட்டத்தில் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 44	கூட்டுத்தாபனத்தினால் காணப்படுகின்ற நிதி ஏற்பாட்டின் அடிப்படையில்	ஆபத்திற்கு உள்ளாக்கக்

வயதான ஊழியர் கட்டுத் துவக்கினால் சுடப்பட்டு 2024 யூன் 15 ஆந் திகதி மரணமடைந்து அந்த மரணத்திற்காக கூட்டுத்தாபனத்தின் மூலம் ரூபா 260,000 இழப்பீடும் 2024 யூலை மாதத்தின் போது செக்ரோல் அடிப்படையில் (20 ஆண்டுகள் சேவையாற்றிய) சேவையாற்றிக்கொண்டிருக்கையில் இருதய நோயினால் மரணமடைந்த வேலையாளரின் உறவினருக்கு ரூபா 90,000 தொகையும் கூட்டுத்தாபனத்தின் நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களில் சேவையாற்றுகின்ற ஆபத்திற்கு உள்ளாகக்கூடிய ஊழியர்களுக்காக காப்புறுதி முறைமை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	அண்மைக்காலமாக வாகனக் காப்புறுதியினைத் தவிர்த:து ஏனைய ஆதனம் அல்லது ஊழியர் காப்புறுதி முறைமை அமுல்ப்படுத்தப்படாததுடன் இக்கணக்காய்வு அவதானிப்பு சம்பந்தமாகவும் கவனம் செலுத்தி நிதி ஏற்பாடுகளின் நிலைமையையும் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் அந்த ஊழியர் மற்றும் ஏனைய காப்புறுதி முறைமையை கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	கூடிய ஊழியர்களுக்கு காப்புறுதி முறைமை வழங்கப்படுதல் வேண்டும்.